**மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் தனித் தேர்வர்களுக்கு மதிப்பெண்கள் வழங்குதல் –அரசாணை**

சுருக்கம்

பள்ளிக்கல்வி– அரசுத் தேர்வுகள் இயக்ககம்– மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் தனித் தேர்வர்களுக்கு மதிப்பெண்கள் வழங்குதல் – ஆணைவெளியிடப்படுகிறது.

**பள்ளிக்கல்வி (ஜி.இ–1)துறை**

**அரசாணை (நிலை) எண். 243** **நாள்:17.11.2017**

திருவள்ளுவர் ஆண்டு 2048, ஹேவிளம்பி வருடம், கார்த்திகை 1,

**படிக்கப்பட்டவை:–**

1. அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக் கல்வி (அ.தே.1)த் துறை, நாள் 22.05.2017
2. அரசாணை (நிலை) எண்.50, பள்ளிக்கல்வி (ஜி.இ–1)த் துறை, நாள் 09.08.2017
3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.104944/எச்எப்.1/2017.

**ஆணை:–**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017–2018–ஆம் ஆண்டிலிருந்து மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் மாநில அளவில் அரசுப் பொதுத் தேர்வுகள் நடத்தப்படும் எனவும், மேல்நிலைத் தேர்வில் அனைத்து பாடங்களிலும் மாணவர்கள் தொடர் கற்றலை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு பாடத்திலும் 10 விழுக்காடு மதிப்பெண்கள் அகமதிப்பீடாக வழங்கலாம் ஆணையிடப்பட்டது.

2. இதன் தொடர்ச்சியாக, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கற்றலுக்கு மாணவர்களின் வருகைப்பதிவு முக்கியம் என்பதால், மாணவர்களின் வருகைப் பதிவு, உள்நிலைத் தேர்வுகள் மற்றும் ஒப்படைவு/ செயல் திட்டம் / களப் பயணம் ஆகியவற்றின் அடிப்படையில் எவ்வாறு மதிப்பெண் வழங்குவது என்பது குறித்த வடிவமைப்பு மற்றும் நெறிமுறைகள் குறித்தும் ஆணையிடப்பட்டது. மேலும், அகமதிப்பீட்டிற்கான 10 மதிப்பெண்களை வழங்க வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது. எனினும், இந்நடைமுறையானது பள்ளியில் பயின்று தேர்வெழுதும் மாணவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதால், மேல்நிலைத் தேர்வெழுதும் நேரடி தனித்தேர்வர்களுக்கு அகமதிப்பீட்டு முறையினை நடைமுறைப்படுத்துவதற்கு பதிலாக 90 மதிப்பெண்களுக்கான எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்களை 100 மதிப்பெண்களுக்கு கணக்கிட்டு வழங்கலாம் என தெரிவித்துக்கொண்டு அது குறித்து தேர்வுத் துறை இயக்குநர் அரசின் ஆணையினை வழங்குமாறு மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கோரியுள்ளார்.

3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துரு, அரசால் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று மேல்நிலை முதலாமாண்டு தேர்வுவெழுதும் நேரடி தனித்தேர்வர்களுக்கு கீழ்க்காணும் வழிமுறைகளை பின்பற்றி தேர்வுகளில் மதிப்பெண் வழங்கலாமென முடிவெடுத்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

i.நேரடி தனித்தேர்வர்ளுக்கு அகமதிப்பீட்டு முறையினை நடைமுறைப்படுத்த வேண்டாம்.

ii.அதற்குப் பதிலாக நேரடித் தனித்தேர்வர்கள் 90 மதிப்பெண்களுக்கான எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்களை 100 மதிப்பெண்களுக்கு கணக்கிட்டு வழங்கலாம். அவ்வாறு, 90 பெற்ற மதிப்பெண்களை 100 மாற்றம் செய்யும் பொழுது பெறும் மதிப்பெண் தசமமாக இருந்தால் (பெருமம், சிறுமம் கருதாமல்) அம்மதிப்பெண்ணை அடுத்த முழு எண்ணிற்கு மாற்றலாம்.

iii.மேல்நிலைத் தேர்வில் தேர்ச்சியடைய நேரடி தனித்தேர்வர்கள் அணைத்துப் பாடங்களிலும் எழுத்துத் தேர்வில் 100 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 35 மதிப்பெண்கள் பெற வேண்டும்.

4. மேலே பத்தி 3–ல் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகளை 2017–2018–ம் கல்வியாண்டிலிருந்து பின்பற்றுமாறு அரசுத் தேர்வர்கள் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்

அரசு முதன்மை செயலாளர்